**<u>கண்டி மாநகர சபையின் நலன்புரித் திணைக்களத்திற்காக சேவைகள் கொள்வனவு செய்தல் முறையின் அடிப்படையில்</u>**
**<u>தையல் ஆலோசகர் உதவியாளர் சேவையைப் பெற்றுக் கொள்ளல்</u>**

கண்டி மாநகர சபையின் சேவைத் தேவைப்பாட்டுக்கு அமைய சேவையினைப் கொள்வனவு செய்தல் அடிப்படையில் தையல் ஆலோசகர் உதவியாளர் சேவையைப் பணியினைப் பெறுவதற்காக உரிய தகைமைகளைப் பெற்றுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் படி விண்ணப்பம் இடப்படுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சேவையின் பெயர் குறிப்பிடப்பட்டு 2025.05.02 ஆம் திகதிக்கு முன்னர் நகர ஆணையாளர், கண்டி மாநகர சபை. கண்டி எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

**<u>தையல் ஆலோசகர் உதவியாளர் சேவை</u>**

1. கொள்வனவு செய்தற்காக உள்ள சேவை. : சேவை கொள்வனவு செய்தல் முறையின் அடிப்படையில் தையல் ஆலோசகர் உதவியாளர் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

2. கொடுப்பனவு : நாளந்தம் ரூபா. 1926.66 எனும் அடிப்படையில் கொடுப்பனவு வழங்கப்படும். (அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 10/2025 இன் PL 1 சம்பளத் திட்டத்தின் ஆரம்ப சம்பள அளவின் அடிப்படையில்)

3. உடலியல்த் தகைமைகள் குறித்த சேவையினை வழங்குவதற்குப் போதுமான உடல் மற்றும் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

4. கல்வித் தகைமைகள் : க.பொ.த (சா/த) பரீட்சையில் 02 (இரண்டு) பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 (ஆறு) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். இங்கு 5 பாடங்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5. மேலதிக தகைமைகள் : ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தையுடைய தையல் பயிற்சி பாடநெறியினைப் பயின்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு சமமான தகைமையைப் பெற்றிருக்க வேண்டும்.

6. தொழில் தகைமைகள் : தையல் ஆலோசகர் தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட அனுபவம்.

7. ஏனைய தகைமைகள் :
   - விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல்
   - நியமனம் வழங்குவதற்கான த கை மைகள் அனைத்தும் விண்ணப்பம் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து வழிகளிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
   - பெண் விண்ணப்பதாரர்களம் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

8. வயது : அனைத்து விண்ணப்பதாரர்களும் விண்ணப்பம் ஏற்கப்படும் திகதிதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 55 வயதிலும் அதிகரிக்காமலும் இருக்க வேண்டும்.

7. தெரிவு செய்யப்படுகின்ற முறை : தகைமைகளைப் பூர்த்திசெய்கின்றவர்கள் கீழ்க்கு குறிப்பிடப்படும் நுபந்தகைகளுக்கு அமைய சேவைக்காகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் பெறுகின்ற புள்ளிகளுக்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் 02 விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளார்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீசையில் அதிக புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவார்.

8. சேவை நிபந்தனைகள் :

- நியமனம் வழங்கப்படுகின்ற தினத்திலுந்து ஒரு வருட காலம் சேவைக் காலமாகும்/ சேவையின் தேவை அடிப்படையில் சேவைக் காலத்தை அதிகரிப்பதற்கு நகர ஆணையாளரினால் தீர்மானிக்கப்படும்.
- எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சேவையை முடிவுக்குக் கொண்டுவர நகர ஆணையாளருக்கு அதிகாரம் உண்டு
- தெரிவு செய்யப்பட்டவர்கள் சேவையிலிருந்து நீங்கிக் கொள்வதாயின் ஒரு மாதத்திற்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.
- இந்த நியமனம் வழங்கப்படுவது சேவையின் அவசியப்பாடு காரணமாக மாத்திரம் என்பதுடன் வேறு அரச பதவி ஒன்றினைப் பெறுவதற்கான உரிமை ஒன்றாக அமையாது.
- தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளருடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

குறிப்பு - இந்த சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் கண்டி மாநகர சபையின் www.kandy.mc.gov.lk எனும் இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பம் பெறப்படும் இறுதித்திகதிக்கு அனைத்து அவசியமான தகைமைகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் சேவை பெறுதல் குறித்த இறுதித் தீர்மானம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளரினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் கோரப்பட்ட பின்னரோ அல்லது விண்ணப்பம் கோரப்படுகின்ற காலத்திலோ இந்த நியமனம் வழங்குதலை தாமதப்படுத்துவதற்று, மாற்றுவதற்கு, இந்த அறிவிலை இரத்துச் செய்வதற்கு, இந்த அறிவித்தலைத் திருத்தியமைப்பதற்கு என பூரண அதிகாரம் கண்டி மாநகர சபையின் நகர ஆணையாளருக்கு உண்டு.

❖ விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் போது, குறித்த கடித உறையின் இடது மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட வேண்டும். (''தையல் ஆலோசகர் உதவியாளர் சேவையைப் பெற்றுக் கொள்ளவதற்கான விண்ணப்பம்'').

ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்க.
நகர ஆணையாளர்
கண்டி மாநகர சபை

2025.04.11